# திருமண பொருத்தங்கள் - 27

1. லக்னப் பொருத்தம்
2. நட்சத்திரப் பொருத்தம்
3. ஏகதினப் பொருத்தம்
4. ராசிப் பொருத்தம்
5. ராசியதிபதி பொருத்தம்
6. கணப் பொருத்தம்
7. ஸ்திரி தீர்க்கப் பொருத்தம்
8. மகேந்திரப் பொருத்தம்
9. யோனிப் பொருத்தம்
10. வசியப் பொருத்தம்
11. ரச்சுப் பொருத்தம்
12. வேதைப் பொருத்தம்
13. இராசி வருணப் பொருத்தம்
14. நட்சத்திர ஜாதிப் பொருத்தம்
15. நாடிப் பொருத்தம்
16. பஞ்சபூதப் பொருத்தம்
17. ஆய்ப பொருத்தம்
18. யோகினிப் பொருத்தம்
19. சந்திரயோக வர்க்கப் பொருத்தம்
20. பஞ்சபட்சிப் பொருத்தம்
21. கோத்திரப் பொருத்தம்
22. லிங்கப் பொருத்தம்
23. விருச்சப் பொருத்தம்
24. ஆயுட் பொருத்தம்
25. விருத்திப் பொருத்தம்
26. தேசங்களுக்குப் பிரதானப் பொருத்தம்
27. கூட்டு தசைப் பொருத்தம் (தசா சந்தி)

# முகூர்த்த நேரத்தில் பார்க்க வேண்யடி விபரங்கள்

திருமணத்திற்கு 21 மகாபதோஷங்கள் உண்டு - நாரதமுனி

1. லக்கினத்திற்கு ஏழாமிடம் சுத்தியில்லாதது
2. சூரிய சங்கிரமம் மாதப் பிறப்பு
3. பாப அஷ்ட வர்க்கம்
4. சுக்கிரன் ஆறாமிடம் இருத்தல்
5. செவ்வாய் எட்டாமிடம் இருத்தல்
6. கண்டாந்திரம்
7. கத்திரி யோகம் தோஷம்
8. லக்கினத்திற்கு முன் பின் பாபர்கள் இருத்தல்
9. முகூர்த்த லக்கினம் எட்டாமிடம் வருதல்
10. விஷக் கடிகை
11. தோஷமுள்ள முகூர்த்தம்
12. வார தோஷம்
13. ஒரே கணம்
14. கிரகணம் பிடித்த நட்சத்திரம்
15. உற்பாத கண்ட நட்சத்திரம்
16. பாபகிரக வேதை
17. பாப கிரந்தம்
18. பாப சாரம்
19. மாகவியாதீதீ பாதம்
20. மகாவை திருதி
21. ஆறாமிடம், எட்டாமிடம் சந்திரன் இருத்தல் தோஷம்

# 1. லக்னப் பொருத்தம்

லக்னம் அவரவர் பூர்வ புண்ணிய தவத்தாலும், ஊழ்வினைப் பயனாலும் இறைவன் அமைத்தது. விதி என்பது உயிராகிய ஜென்ம லக்னம், மதி என்பது உடலாகிய சந்திர லக்னம்

| இந்த லக்னதிற்கு | பொருந்தும் லக்னங்கள் |
|---|---|
| 1. மேஷம் | சிம்மம், தனுசு |
| 2. ரிஷபம் | கன்னி, விருச்சிகம் |
| 3. மிதுனம் | துலாம், கும்பம் |
| 4. கடகம் | துலாம், மீனம் |
| 5. சிம்மம் | விருச்சிகம், தனுசு |
| 6. கன்னி | மகரம், மிதுனம் |
| 7. துலாம் | கும்பம், மிதுனம் |
| 8. விருச்சிகம் | மீனம், கும்பம் |
| 9. தனுசு | மேஷம், சிம்மம் |
| 10. மகரம் | ரிஷபம், துலாம் |
| 11. கும்பம் | மிதுனம், ரிஷபம் |
| 12. மீனம் | கடகம், தனுசு |

| | | |
|---|---|---|
| சரத்திற்கு | 2, 7 மாரம் | 11 – பாதகம் |
| ஸ்திரத்திற்கு | 3, 8 மாரகம் | 9 – பாதகம் |
| உபயத்திற்கு | 7, 11 மாரகம் | 7 – பாதகம். |

“இந்த பொருத்தம் பொருந்தினால் இறைவனருள் இந்த பூமியில் இருக்கும் வரை உண்டு”

# 2. நட்சத்திரப் பொருத்தம்

| | | |
|---|---|---|
| அஸ்வினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

பெண்ணுடைய ஜென்ம நட்சத்திரம் முதல்

27 நட்சத்திரங்களை ஒன்பது ஒன்பதாக மூன்று பிரிவுகளாக்கி முதல் ஒன்பதில் 2, 4, 6, 8, 9ம் நட்சத்திரங்களும், இரண்டாம் ஒன்பதில் 2, 4, 6, 9ம் நட்சத்திரங்களும், மூன்றாம் ஒன்பதில் 2, 6, 8ம் நட்சத்திரங்களும் ஆணின் நட்சத்திரங்களாய் வந்தால் பொருந்தும். இரண்டாம் ஒன்பதில் 3ம் நட்சத்திரம் முதல் பாதமும், 5ம் நட்சத்திர நான்காம் பாதமும், 7ம் நட்சத்திர மூன்றாம் பாதமும், கழித்து மற்றுள்ள பாதங்களை மத்தியமாகக் கொள்ளப்படும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் நோயில்லா வாழ்வு அமையும்”

# 3. ஏகதினப் பொருத்தம்

ரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்தம், உத்திராடம், திருவோணம், ரேவதி இந்த எட்டு நடதச்திரத்தில் ஏதேனும் ஒன்று ஆண், பெண் இருவருக்கும் இருந்தால் பொருத்தம் மிகவும் உத்தமம்.

அஸ்வினி, கிருத்திகை, மிருகசீரிஷம், புனர்பூசம், உத்திரம், சித்திரை, அனுஷம், உத்திராடம் இந்த எட்டு நட்சத்திரத்தில், ஏதேனும் ஒன்று ஆண், பெண் இருவருக்கும் இருந்தால் பொருத்தம் மத்திமம்.

பரணி, ஆயில்யம், பூரம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், பூராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இந்த பதினொரு நட்த்திரத்தில் ஏதேனும் ஒன்று ஆண், பெண் இருவருக்கும் இருந்தால் பொருத்தம் பொருந்தாது.

ஆண், பெண் இருவருக்கும் ஓரே நட்சத்திரமானாலும், ஆணின் ராசி 12வது ராசியாக வந்தாலும் பொருத்தம் பொருந்தாது.

பிராமணர்கள் ஏகதினப் பொருத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் ஆயுளுக்கு பங்கம் நேராது”

# 4. ராசிப் பொருத்தம்

இராசிகள் - 12. இராசி அதிபதிகள் - 7.

இரண்டு பிரிவுகளாக இதில் ஆண் இராசி, பெண் இராசி என கீழ் கண்டவாறு காண்க.

| **ஆண் ராசிகள்** | **பெண் ராசிகள்** |
|---|---|
| மேஷம் | ரிஷபம் |
| மிதுனம் | கடகம் |
| சிம்மம் | கன்னி |
| துலாம் | விருச்சிகம் |
| தனுசு | மகரம் |
| கும்பம் | மீனம் |

ஒரே ராசியாகில் சுகமடைவர்.

2-வது ராசியாகில் குறைந்த இல்லற வாழ்க்கை.

3-வது ராசியாகில் மனக்குழப்பம், நோய்.

4-வது ராசியாகில் தரித்திரம், கெட்டபெயர்.

5-வது ராசியாகில் விரோதம், ஆயுள் குறைவு.

6-வது ராசியாகில் கலகம், பாக்கியக்குறைவு.

7-வது ராசியாகில் தீர்க்க சுமங்கலி

8-வது ராசியாகில் புத்திரவிருத்தி ஆனால் மனவேதனை

9-வது ராசியாகில் சௌமாங்கல்யம், சந்தொஷம்.

10-வது ராசியாகில் தனவிருத்தி, பொன் விருத்தி

11-வது ராசியாகில் அதிக சுகம், அதிக நன்மை.

12-வது ராசியாகில் ஆயுள் விருத்தி.

இருவருடைய ராசியும் ஒன்றாக இருந்தால் நல்லது என்று நம் முன்னோர் கருத்து.

“இந்த பொருத்தம் பொருந்தினால் செல்வ விருத்தி, சந்தோஷம் நம்மை சந்திக்கும்.”

# 5. ராசியதிபதிப் பொருத்தம்

இராசிகள் - 12.

| **ஆண் ராசிகள்** | **பெண் ராசிகள்** |
|---|---|
| மேஷம் - செவ்வாய் | ரிஷபம் - சுக்கிரன் |
| மிதுனம் - புதன் | கடகம் - சந்திரன் |
| சிம்மம் - சூரியன் | கன்னி - புதன் |
| துலாம் - சுக்கிரன் | விருச்சிகம் - செவ்வாய் |
| தனுசு - குரு | மகரம் - சனி |
| கும்பம் - சனி | மீனம் - குரு |

சூரியன், சந்திரன், செவ்வாய், குரு ஆகியோர் நண்பர்கள்.

சனி, சுக்கிரன், புதன் ஆகியோர் நண்பர்கள்.

இந்த 12 ராசிகளில் பெண் ராசியதிபதியும், ஆண் ராசியதிபதியும் ஒருவருக்கு ஒருவர் நட்பு உடையவர்களாய் இருந்தாலும் அல்லது சமமித்திரர்களாய் இருந்தாலும் அந்த ராசிகள் உத்தமம்.

பெண் ராசியதிபதி பகையாக வந்தால் அது மத்திமம்.

பெண் ராசியதிபதியும், ஆண் ராசியதிபதியும் சம பகையாக வந்தால் அது பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் பதவிகள் நம்மை தேடி வரும்”

# 6. கணப் பொருத்தம்

| **தேவ கணம்** | **மனுஷ கணம்** | **ராட்சத கணம்** |
|---|---|---|
| அஸ்வினி | பரணி | கிருத்திகை |
| மிருகசீரிஷம் | ரோகிணி | ஆயில்யம் |
| புனர்பூசம் | திருவாதிரை | மகம் |
| பூசம் | பூரம் | சித்திரை |
| அஸ்தம் | உத்திரம் | விசாகம் |
| சுவாதி | பூராடம் | கேட்டை |
| திருவோணம் | பூரட்டாதி | அவிட்டம் |
| அனுஷம் | உத்திராடம் | மூலம் |
| ரேவதி | உத்திரட்டாதி | சதயம். |

மூன்று வித குணங்களை நம் முன்னோர்கள் நிர்ணயித்துள்ளார்கள். அதில் தேவ குணமுடையவர்கள் சாந்தம், பொறுமை, ஒழுக்கம் உடையவர்கள். மனித குணம் கொண்டவர்கள் சமூகத்திற்கு நன்மை செய்ய நினைப்பார்கள். ஆனால் சூழ்நிலை தடுக்கும். ராட்சத குணம் கொண்டவர்கள் மற்றவர்களை இம்சை செய்தல், கொடூரமாக பேசுதல், உணர்ச்சி வசப்படுதல்.

இருவருக்கும் ஒரே கணமானால் உத்தமம். பெண் மனுஷ கணமும், ஆண் தேவ கணமும் உத்தமம். பெண் தேவ கணமும், ஆண் மனுஷ கணமும் மத்திமம். பெண் தேவ கணமும், ஆண் ராட்சத கணமும் பொருந்தாது.

இப்பொருத்தம் சத்ரியர்களால் அதிகம் பார்க்கப்படும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் சண்டை சச்சரவு நேராது”

# 7. ஸ்திரி தீர்க்கப் பொருத்தம்

| | | |
|---|---|---|
| அஸ்வனி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி. |

இந்த 27 நட்சத்திரங்களில் பெண்ணின் ஜெனன நட்சத்திர முதல் எண்ணி வரும் ஆணின் ஜெனன நட்சத்திரம் 14-வது நட்த்திரத்திற்கு மேல் 27-வது நட்சத்திரம் வரை உத்தமம்.

இப்பொருத்தம் சரிவர அமையவில்லை என்றால், குடும்பத்தில் வீழ்ச்சி ஏற்படும். அக்குடும்பம் சூறாவளியில் சிக்கிய கப்பலைப் போல் சின்னாபின்னமாகி விடும் என்று சொல்லப்படுகிறது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்”.

# 8. மகேந்திரப் பொருத்தம்

| | | |
|---|---|---|
| அஸ்வனி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி. |

இந்த 27 நட்சத்திரங்களில் பெண்ணின் நட்சத்திரம் முதல் ஆணின் நட்சத்திரம் வரை எண்ணினால் 1, 4, 7, 10, 13, 16, 19, 22, 25-ம் நட்சத்திரங்கள் வந்தால் மகேந்திர பொருத்தம் உண்டு.

பெண்கள் நட்சத்திரம் ஆயில்யம், சித்திரை, அனுஷம், அவிட்டம், சதயம் நட்சத்திரமாக இருந்து ஏழாவது நட்சத்திர ஆணை மணந்தால் இல்லற வாழ்க்கை சுகமிருக்காது.

பூசம், பூரம், அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்களுக்கு ஏழாம் நட்சத்திர ஆணை மணந்தால் இல்லற வாழ்க்கை சுகமாயிருக்கும் (தோஷமில்லை).

ஏழாவது நட்சத்திரமும் சாஸ்திரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எந்தெந்த நட்சத்திரத்திற்கு ஏழாம் நட்சத்திரம் கெடுதி செய்கிறது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள் நம் முன்னோர்கள்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் குலம் விளங்கும், மணம் மகிழும்”

# 9. யோனிப் பொருத்தம்

14 பிராணிகளை 27 நட்சத்திரங்களுக்கு நட்பு, சமம், பகை என்று கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| அஸ்வினி | – ஆண் குதிரை | பரணி | – ஆண் யானை |
| கிருத்திகை | – பெண் ஆடு | ரோகிணி | – ஆண் நாகம் |
| மிருகசீரிஷம் | – பெண் சாரை | திருவாதிரை | – ஆண் நாய் |
| புனர்பூசம் | – பெண் பூனை | பூசம் | – ஆண் ஆடு |
| ஆயில்யம் | – ஆண் பூனை | மகம் | – ஆண் எலி |
| பூரம் | – பெண் எலி | உத்திரம் | – ஆண் எருது |
| அஸ்தம் | – பெண் எருமை | சித்திரை | – ஆண் புலி |
| சுவாதி | – ஆண் எருமை | விசாகம் | – பெண் புலி |
| அனுஷம் | – பெண் மான் | கேட்டை | – ஆண் மான் |
| மூலம் | – பெண் நாய் | பூராடம் | – ஆண் குரங்கு |
| உத்திராடம் | – பெண் பசு(மலடு) | திருவோணம் | – பெண் குரங்கு |
| அவிட்டம் | – பெண் சிங்கம் | சதயம் | – பெண் குதிரை |
| பூரட்டாதி | – ஆண் சிங்கம் | உத்திரட்டாதி | – பெண் பசு |
| ரேவதி | – பெண் யானை | | |

ஆணுக்கு ஆண் யோனி, பெண்ணுக்கு பெண் யோனியும் அமைவது உத்தமம். ஆண், பெண் இருவருக்கும் ஆண் யோனியாக இருப்பது அல்லது பெண் யோனியாக இருப்பது மத்திமம். ஆணுக்கு பெண் யோனியும், பெண்ணுக்கு ஆண் யோனியும், ஆண், பெண் இருவருக்கும் பகை யோனியாக இருப்பது பொருந்தாது.

**நட்பு யோனிகள்:**

மானுக்கு பசு நட்பு ஆட்டுக்கு குதிரை நட்பு நாய்க்கு மனிதர் நட்பு

**பகை யோனிகள்:**

| | |
|---|---|
| யானை | - சிங்கம், மனிதர் |
| குதிரை | - பசு, எருமை |
| பசு, எருமை, மான், நாய் | - புலி |
| குரங்கு | - ஆடு |
| எலி | - பூனை, பாம்பு |
| பாம்பு | - கீரீ, ஆடு. |
| பூனை | - நாய், புலி |

“இந்த பொருத்தம் பொருந்தினால் சொர்க்கத்தை அனுபவிக்கலாம்”

# 10. வசியப் பொருத்தம்

பெண் ராசிக்கு ஆண் ராசி வசியம் செய்யக்கூடிய ராசியாக இருந்தால் இருவருக்கும் இயற்கையான வசியம் ஏற்பட்டு அன்பு, பாசத்துடன் இல்லற வாழ்க்கையை நடத்துவார்கள்.

| **ராசி** | **வசிய ராசி** |
| --- | --- |
| மேஷம் | சிம்மம், விருச்சிகம் |
| ரிஷபம் | கடகம், துலாம் |
| மிதுனம் | கன்னி |
| கடகம் | விருச்சிகம், தனுசு |
| சிம்மம் | மகரம் |
| கன்னி | ரிஷபம், மீனம் |
| துலாம் | மகரம் |
| விருச்சிகம் | கடகம், கன்னி |
| தனுசு | மீனம் |
| மகரம் | கும்பம் |
| கும்பம் | மீனம் |
| மீனம் | மகரம் |

**வசியம் இல்லாத ராசிகள்:**

| | |
| --- | --- |
| கன்னி | மகரம் |
| கும்பம் | கடகம் |
| துலாம் | மீனம் |

பெண் ராசிக்கு ஆண் ராசி வசியமானால் உத்தமம்.
ஆண் ராசிக்கு பெண் ராசி வசியமானால் மத்திமம்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் இரண்டு உள்ளங்களும் இன்பமாய் இன்பம் அனுபவிக்கும்”

# 11. ரச்சுப் பொருத்தம்

27 நட்சத்திரங்களை ஐந்து பாகமாக பிரித்துள்ளனர்.

தலை, கழுத்து, வயிறு, தொடை, பாதம்

| | | | |
|---|---|---|---|
| **தலை** | மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| **கழுத்து (ஆரோ)** | ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| **கழுத்து (அவரோ)** | திருவாதிரை | சுவாதி | சதயம் |
| **வயிறு (ஆரோ)** | கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| **வயிறு (அவரோ)** | புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| **தொடை (ஆரோ)** | பரணி | பூரம் | பூராடம் |
| **தொடை (அவரோ)** | பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| **பாதம் (ஆரோ)** | அஸ்வினி | மகம் | மூலம் |
| **பாதம் (அவரோ)** | ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

வெவ்வேறுபட்ட ரச்சு நட்சத்திரங்கள் சுபமான ஆரோகண பிரிவைச் சேர்ந்ததானால் பொருத்தம் உத்தமம். ஒரே ரச்சுவாக இருந்தாலும் ஒன்று ஆரோகண வகுப்பையும், மற்றொன்று அவரோகண வகுப்பையும் சேர்ந்ததாக இருந்தால் அந்த பொருத்தம் மத்திமம். ஒரே வகுப்பைச் சோந்த ஒரே ரச்சு நட்சத்திரங்கள் பொருந்தாது.

பெண்ணின் ஜெனன நட்சத்திரமும், ஆணின் ஜெனன நட்சத்திரமும் ஒரே வகுப்பு ரச்சுவெனில் அந்த ரச்சு தட்டுகின்றது என்ற அமைப்பை பெறுவதால் இப்படிப்பட்ட ரச்சுவின் பலன் பின்வருமாறு

தலை ரச்சுவாக இருந்தால் கணவனின் மரணம்.

கழுத்து ரச்சுவாக இருந்தால் பெண்ணின் மரணம்.

வயிறு ரச்சுவாக இருந்தால் புத்திர தோஷம்.

தொடை ரச்சுவாக இருந்தால் பண விரயம்.

பாத ரச்சுவாக இருந்தால் பிரயாணத்தில் கண்டம்.

ஆணுக்கோ, பெண்ணிற்கோ மிருகசீரிஷம், மகம், சுவாதி, அனுஷம் என்ற நட்சத்திரம் அமைந்தால் ரச்சு பாதிப்பு ஏற்படாது என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் என்று பதினாறு வயது”

# 12. வேதை பொருத்தம்

27 நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரத்திற்கு எது வேதை என்று காண்க.

| **நட்சத்திரம்** | **வேதை நட்சத்திரம்** |
|---|---|
| அஸ்வினி | கேட்டை |
| பரணி | அனுஷம் |
| கிருத்திகை | விசாகம் |
| ரோகிணி | சுவாதி |
| மிருகசீரிஷம் | சித்திரை, அவிட்டம் |
| திருவாதிரை | திருவோணம் |
| புனர்பூசம் | உத்திராடம் |
| பூசம் | பூராடம் |
| ஆயில்யம் | மூலம் |
| மகம் | ரேவதி |
| பூரம் | உத்திரட்டாதி |
| உத்திரம் | பூரட்டாதி |
| அஸ்தம் | சதயம் |

பெண் நட்சத்திரத்திற்கு ஆண் நட்சத்திரமும், ஆண் நட்சத்திரத்திற்கு பெண் நட்சத்திரமும் வேதையானால் பொருத்தம் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் மன அமைதி அமையும்”

# 13. இராசி வருணப் பொருத்தம்

**சத்திரிய வருணம்:**

மேஷம், சிம்மம், தனுசு.

**வைசிய வருணம்:**

ரிஷபம், கன்னி, மகரம்.

**சூத்திர வருணம்:**

மிதுனம், துலாம், கும்பம்.

**பிராமண வருணம்:**

கடகம், விருச்சிகம், மீனம்.

ஆண், பெண் இருவரது ராசிகளும் ஒரே வருணமாகில் உத்தமம்.

ஆண் ராசி உயர்ந்த வருணமும், பெண் ராசி தாழ்ந்த வருணமும் வந்தால் மத்திமம்.

ஆண் ராசி தாழ்ந்த வருணமும், பெண் ராசி உயர்ந்த வருணமும் வந்தால் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் நல்ஒழுக்கம் அமையும்”

# 14. நட்சத்திர ஜாதி பொருத்தம்

**பிராமண ஜாதி:**

அஸ்வினி, புனர்பூசம், மூலம், அஸ்தம், பூரட்டாதி

**சத்ரிய ஜாதி:**

பரணி, பூசம், சித்திரை, பூராடம், உத்திரட்டாதி

**வைசிய ஜாதி:**

கிருத்திகை, ஆயில்யம், சுவாதி, உத்திராடம், ரேவதி

**சூத்திர ஜாதி:**

ரோகிணி, மகம், விசாகம், திருவோணம்

**பஞ்சம ஜாதி:**

மிருகசீரிஷம், பூரம், அனுஷம், அவிட்டம்.

**சங்கர ஜாதி:**

திருவாதிரை, உத்திரம், கேட்டை, சதயம்.

ஆணும் பெண்ணும் ஒரே ஜாதி நட்சத்திரமானால் உத்தமம்.

ஆண் உயர்ந்த சாதி நட்சத்திரமும், பெண் தாழ்ந்த நட்சத்திரமும் வந்தால் மத்திமம்.

ஆண் தாழ்ந்த சாதி நட்சத்திரமும், பெண் உயர்ந்த சாதி நட்சத்திரமும் வந்தால் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் நல்ல குணங்கள் நாடி வரும்”

# 15. நாடி பொருத்தம்

27 நட்சத்திரங்களுக்கும் மூன்று பிரிவுகளாக நாடியை பிரித்துள்ளனர். ஒவ்வொரு நாடிக்கும் ஒன்பது நட்சத்திரங்கள் என்ற விகிதத்தில் அடங்கியுள்ளன.

| **பார்சுவ நாடி** | **மத்திய நாடி** | **சமான நாடி** |
|---|---|---|
| அஸ்வினி | பரணி | கிருத்திகை |
| திருவாதிரை | மிருகசீரிஷம் | ரோகணி |
| புனர்பூசம் | பூசம் | ஆயில்யம் |
| உத்திரம் | பூரம் | மகம் |
| அஸ்தம் | சித்திரை | சுவாதி |
| கேட்டை | அனுஷம் | விசாகம் |
| மூலம் | பூராடம் | உத்திராடம் |
| சதயம் | அவிட்டம் | திருவோணம் |
| பூரட்டாதி | உத்திரட்டாதி | ரேவதி. |

ஆணின் நட்சத்திரமும் பெண்ணின் நட்சத்திரமும் ஒரே நாடியாக வந்தால் பொருத்தம் பொருந்தாது. ஆயுளுக்கு தோஷம் உண்டு.

இருவருக்கும் மத்திம நாடியாக வந்தால் இருவரில் ஒருவருக்காவது குறை வரும்.

சுவாதி, திருவோணம், கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், மகம், அஸ்தம், அனுஷம், மூலம், ரேவதி இந்த நட்சத்திரங்கள் இருக்குமாயின் ஒரே நாடியாக வந்தால் பொருத்தம் உத்தமம். ஆயுள் விருத்தியுண்டு.

நாடி மாறி வந்தால் பொருத்தம் உண்டு.

“இந்த பொருத்தம் பொருந்தினால் பிறக்கும் குழந்தை யோகமாக இருக்கும்”.

# 15. பஞ்சபூத பொருத்தம்

| பிருத்வி | அப்பு | தேயு | வாயு | ஆகாயம் |
|---|---|---|---|---|
| அஸ்வினி | திருவாதிரை | உத்திரம் | கேட்டை | அவிட்டம் |
| பரணி | புனர்பூசம் | அஸ்தம் | மூலம் | சதயம் |
| கிருத்திகை | பூசம் | சித்திரை | பூராடம் | பூரட்டாதி |
| ரோகிணி | ஆயில்யம் | சுவாதி | உத்திராடம் | உத்திரட்டாதி |
| மிருகசீரிஷம் | மகம் | விசாகம் | திருவோணம் | ரேவதி |
| | பூரம் | அனுஷம் | | |

ஆணும் பெண்ணும் ஒரே பூதமாயின் பொருத்தம் உத்தமம்.

அப்புவும், தேயுமாவின் பொருத்தம் பொருந்தாது.

மற்ற பூதங்களாக இருப்பின் பொருத்தம் மத்திமம்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் சகல சௌபாக்கியம் வந்தமையும்.”

# 17. ஆயப் பொருத்தம்

| | | |
|---|---|---|
| **வடகிழக்கு கடகம்**<br>பூசம்,<br>விசாகம்,<br>சதயம் | **கிழக்கு துவசம்**<br>அஸ்வினி,<br>ஆயில்யம்,<br>அனுஷம்,<br>பூரட்டாதி | **தென்கிழக்கு தூமம்**<br>பரணி,<br>மகம்,<br>கேட்டை,<br>உத்திரட்டாதி |
| **வடக்கு குபேர யானை**<br>புனர்பூசம்,<br>சுவாதி,<br>அவிட்டம். | **ஆயச்சக்கரம்** | **தெற்கு சிம்மம்**<br>கிருத்திகை,<br>பூரம்,<br>மூலம்,<br>ரேவதி. |
| **வடமேற்கு கிருத்திகை**<br>திருவாதிரை,<br>சித்திரை,<br>திருவோணம். | **மேற்கு விருஷபம்**<br>மிருகசீரிஷம்,<br>அஸ்தம்,<br>உத்திராடம் | **தென்மேற்கு சுவானம்**<br>ரோகிணி,<br>உத்திரம்,<br>பூராடம் |

மேற்க்கண்ட சக்கரத்தில் கிழக்கு கோட்டில் துவசம், அஸ்வினி ஆண் நட்சத்திரமாகவும் அதற்கு ஐந்தாவது, மேற்குக் கோட்டில் விருஷபம் மிருகசீரிஷம் பெண் நட்சத்திரமாக வந்தால் ஆண், பெண்ணுக்கு கலகம், விரோதம் உண்டு.

இப்படி ஆண் நட்சத்திரத்திற்கு ஐந்தாவது பெண் நட்சத்திரம் வந்தால் ஆயப் பொருத்தம் பொருந்தாது.

மாறி வந்தால் பொருத்தம் பொருந்தும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் ஒருமைப்பாடு ஒளிவிட்டு பிரகாசிக்கும்”

# 18. யோகினி பொருத்தம்

| | | |
|---|---|---|
| **வடகிழக்கு மஹேஸ்வரி**<br>பூசம்,<br>விசாகம்,<br>சதயம் | **கிழக்கு அபிராமி**<br>அஸ்வினி,<br>ஆயில்யம்,<br>அனுஷம்,<br>பூரட்டாதி | **தென்கிழக்கு**<br>பரணி,<br>மகம்,<br>கேட்டை,<br>உத்திரட்டாதி |
| **வடக்கு சாமுண்டி**<br>புனர்பூசம்,<br>சுவாதி,<br>அவிட்டம். | **யோகிணி<br>சக்கரம்** | **தெற்கு வராகி**<br>கிருத்திகை,<br>பூரம்,<br>மூலம்,<br>ரேவதி. |
| **வடமேற்கு மகேந்திரா**<br>திருவாதிரை,<br>சித்திரை,<br>திருவோணம். | **மேற்கு வைஷ்ணவி**<br>மிருகசீரிஷம்,<br>அஸ்தம்,<br>உத்திராடம் | **தென்மேற்கு சித்த சக்தி**<br>ரோகிணி,<br>உத்திரம்,<br>பூராடம் |

ஆண் நட்சத்திரமும், பெண் நட்சத்திரமும் மேற்க்கண்ட சக்கரத்தில் ஒரே தெய்வசக்தியின் நட்சத்திரங்களாக வந்தால் யோகிணி பொருத்தம் பொருந்தும்.

வெவ்வேறு தெய்வசக்திகளின் நட்சத்திரங்களாக வந்தால் யோகிணி பொருத்தம் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் கடமையை நிறைவேற்றுவார்”.

# 19. சந்திரயோக வர்க்க பொருத்தம்

| | | |
|---|---|---|
| **ஈசான்ன ராகு**<br>பூசம்,<br>விசாகம்,<br>சதயம்<br><br>*பூரண அமாவசை* | **இந்திரன் ரவி**<br>அஸ்வினி,<br>ஆயில்யம்,<br>அனுஷம்,<br>பூரட்டாதி<br><br>*பிரதமை, துதியை* | **அக்னி சந்திரன்**<br>பரணி,<br>மகம்,<br>கேட்டை,<br>உத்திரட்டாதி<br><br>*திருதியை, சதுர்த்தசி* |
| **குபேரன், சனி**<br>புனர்பூசம்,<br>சுவாதி,<br>அவிட்டம். | **யோகிணி சக்கரம்** | **யமன், செவ்வாய்**<br>கிருத்திகை,<br>பூரம்,<br>மூலம்,<br>ரேவதி. |
| **வாயு, சுக்கிரன்**<br>திருவாதிரை,<br>சித்திரை,<br>திருவோணம்.<br><br>*ஏகாதசி, துவாதசி* | **வருணன், குரு**<br>மிருகசீரிஷம்,<br>அஸ்தம்,<br>உத்திராடம்<br><br>*நவமி, தசமி* | **நிருதி, புதன்**<br>ரோகிணி,<br>உத்திரம்,<br>பூராடம்<br><br>*சப்தமி, அஷ்டமி* |

இந்த சக்கரத்தில் ஆண் நட்சத்திரம் வருங்கோட்டில் இருக்கின்ற திக்கு அதிபதி கிரகம், நட்சத்திரம், திதி இவைகளுக்கும், பெண் நட்சத்திரம் வருங்கோட்டில் இருக்கின்ற திக்கு அதிபதி கிரகம், நட்சத்திரம், திதி இவைகளுக்கு ஒன்றுக்கொன்று நட்பாகில் பெண் ஆணுக்கு நட்பாம்.

சத்ருவாகில் ஆண் பெண்ணுக்கு பகையாம்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் சகல சம்பத்தும் வந்து சேரும்.”

# 20. பஞ்சபட்சி பொருத்தம்

| **வல்லூறு** | **ஆந்தை** | **காகம்** | **கோழி** | **மயில்** |
|---|---|---|---|---|
| அஸ்வினி | திருவாதிரை | உத்திரம் | அனுஷம் | திருவோணம் |
| பரணி | புனர்பூசம் | அஸ்தம் | கேட்டை | அவிட்டம் |
| கிருத்திகை | பூசம் | சித்திரை | மூலம் | சதயம் |
| ரோகிணி | ஆயில்யம் | சுவாதி | பூராடம் | பூரட்டாதி |
| மிருகசீரிஷம் | மகம் | விசாகம் | உத்திராடம் | உத்திரட்டாதி |
| | பூரம் | | | ரேவதி |

| **பட்சி** | **சத்ரு பட்சி** |
|---|---|
| மயில் | வல்லூறு, ஆந்தை |
| கோழி | வல்லூறு, ஆந்தை |
| காகம் | ஆந்தை |
| ஆந்தை | காகம் |
| வல்லூறு | காகம் |

ஆண் மற்றும் பெண்ணின் நட்சத்திரங்களின் பட்சிகள் பகையானால் பொருத்தம் பொருந்தாது.

நட்பானால் பொருத்தம் உண்டு.

"இந்த பொருத்தம் பொருந்தினால் விரோதம் உண்டாகாது."

# 21. கோத்திர பொருத்தம்

| **மாரீசி** | **அத்திரி** | **வசிஷ்ட** | **அங்கிரஸ** | **புலஸ்திய** | **புலஹத** | **கிருது** |
|---|---|---|---|---|---|---|
| அஸ்வினி | மிருகசீரிஷம் | ஆயில்யம் | அஸ்தம் | அனுஷம் | உத்திராடம் | சதயம் |
| பரணி | திருவாதிரை | மகம் | சித்திரை | கேட்டை | திருவோணம் | பூரட்டாதி |
| கிருத்திகை | புனர்பூசம் | பூரம் | சுவாதி | மூலம் | அவிட்டம் | உத்திரட்டாதி |
| ரோகிணி | பூசம் | உத்திரம் | விசாகம் | பூராடம் | | ரேவதி |

பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரே கோத்திர நட்சத்திரங்களாயின் கோத்திர பொருத்தம் பொருந்தாது.

மாறி வந்தால் பொருத்தம் பொருந்தும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் தருமன் என்ற பெயரை பெறுவான்”

# 22. லிங்கப் பொருத்தம்

| **பெண் லிங்கம்** | **ஆண் லிங்கம** | **அலி லிங்கம்** |
|---|---|---|
| பரணி | அஸ்வினி | மிருகசீரிஷம் |
| திருவாதிரை | கிருத்திகை | மூலம் |
| மகம் | ரோகிணி | சதயம் |
| பூரம் | புனர்பூசம் | |
| உத்திரம் | பூசம் | |
| சித்திரை | அஸ்தம் | |
| சுவாதி | அனுஷம் | |
| விசாகம் | திருவோணம் | |
| கேட்டை | பூரட்டாதி | |
| பூராடம் | உத்திரட்டாதி | |
| உத்திராடம் | | |
| அவிட்டம் | | |
| ரேவதி | | |

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே லிங்க நட்சத்திரமாக வந்தால் பொருத்தம் பொருந்தும். மாறி வந்தால் பொருத்தம் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் இழந்ததை மீண்டும் மீட்பர்”

# 23. விருட்ச பொருத்தம்

| **நட்சத்திரம்** | **விருட்சம்** | **நட்சத்திரம்** | **விருட்சம்** |
|---|---|---|---|
| அஸ்வினி | *எட்டி | சுவாதி | *மருதம் |
| பரணி | *நெல்லி | விசாகம் | *விளா |
| கிருத்திகை | அத்தி | அனுஷம் | *மகிழ் |
| ரோகிணி | நாவல் | கேட்டை | பராய் |
| மிருகசீரிஷம் | *கருங்காலி | மூலம் | மரா |
| திருவாதிரை | *செங்காலி | பூராடம் | வஞ்சி |
| புனர்பூசம் | *மூங்கில் | உத்திராடம் | பலாசு |
| பூசம் | அரசு | திருவோணம் | எருக்கு |
| ஆயில்யம் | புன்னை | அவிட்டம் | *வன்னி |
| மகம் | ஆல் | சதயம் | *கடம்பு |
| பூரம் | பலா | பூரட்டாதி | தேமா |
| உத்திரம் | அலரி | உத்திரட்டாதி | *வேம்பு |
| அஸ்தம் | ஆத்தி | ரேவதி | இலுப்பை |
| சித்திரை | *வில்வம் | | |

*இக்குறி உள்ள மரங்கள் பாலில்லாதவை

ஆண் பெண் இருவருக்கும் பாலுள்ள மரங்களாக வந்தால் மகா உத்தமம்.

பெண் பாலுள்ள மரமாக வந்து, ஆண் பாலில்லா மரமாக வந்தால் புத்திர பாக்கியம் உண்டு.

பெண் பாலில்லா மரமாக வந்து, ஆண் பால் உள்ள மரமாக வந்தால் அப்பெண் மலடு.

ஆண் பெண் இருவருக்கும் பாலில்லாத மரமாக வந்தால் புத்திர சேதம் உண்டு.

மரப்பொருத்தம் புத்திர சந்ததியை குறிப்பிடுவதாகும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் சந்தான வர்க்கம் தழைத்தோங்கும்”

# 24. ஆயுட் பொருத்தம்

பெண் நட்சத்திர முதல், ஆணின் நட்சத்திரம் வரை எண்ணிய தொகையை 7-ஆல் பெருக்கி, 27-ஆல் கழித்து நின்ற தொகையை, ஆண் நட்சத்திரம் முதல் பெண் நட்சத்திரம் வரை எண்ணிய தொகையை 7-ஆல் பெருக்கி 27-ஆல் கழித்து வந்த தொகையோடு ஒப்பிட வேண்டும்.

பெண்ணுடைய நாளின் தொகை குறைந்தால், பெண் முன்னும்

ஆணினுடைய நாளின் தொகை குறைந்தால், ஆண் முன்னும்

மரணமாவார்கள்.

பெண்ணுடைய தொகை குறைந்தால் ஆயுட் பொருத்தம் உத்தமம்.

ஆணினுடைய தொகை குறைந்தால் ஆயுட் பொருத்தம் பொருந்தாது.

“இந்த பொருத்தம் பொருந்தினால் உடலுக்கு தீங்கு நேராது”

# 25. விருத்தி பொருத்தம்

இப்பொருத்தம் பாக்கிய விருத்தியை, செல்வ விருத்தியை கொடுக்கிறது.

ஆண், பெண் இருவருடைய எண்ணிக்கையில் யாருடைய எண்ணிக்கை அதிகமோ அவர்களுக்கு பாக்கியம் விருத்தியடையும்.

பெண் நட்சத்திரம் முதல் ஆண் நட்சத்திரம் வரை எண்ணிக் கொண்ட தொகையை பனிரெண்டில் பெருக்கி, ஒன்பதால் வகுத்து மீதியை மனதில் நிறுத்து,

அதேபோல் ஆணின் நட்சத்திரம் முதல் பெண்ணின் நட்சத்திரம் வரை எண்ணிக் கொண்ட தொகையை பனிரெண்டில் பெருக்கி, ஒன்பதால் வகுத்து மீதியை மனதில் நிறுத்து.

இருவருக்கும் வரும் எண் 9,9 என இருந்தால் உத்தமம்.

இருவருக்கும் வரும் தொகை 6,6 இருந்தால் மத்திமம்.

இருவருக்கும் வரும் தொகை 6,3, 3,3 என இருந்தால் பொருந்தாது.

“இப்பொருத்தம் பொருந்தினால் செல்வம் கொழிக்கும்”

# 26. தேசங்களுக்கு பிரதானப் பொருத்தம்

**சவுராஷ்டிர தேசத்திற்கு**
வேதை பொருத்தம் பொருந்தும்.

**மாளவ தேசத்திற்கும், கலிங்க தேசத்திற்கும்**
ரச்சு பொருத்தம் பொருந்தும்.

**தெஷ்ண தேசத்திற்கும்**
நாடி பொருத்தமும், ராசி அதிபதிப் பொருத்தமும் பொருந்தும்.

**கவுட தேசத்திற்கும், மகத தேசத்திற்கும்**
மகேந்திர பொருத்தம் பொருந்தும்.

**பாஞ்சால தேசத்திற்கும்**
பஞ்சபூதப் பொருத்தம் பொருந்தும்

**சோழ தேசத்திற்கும், விதற்ப தேசத்திற்கும்**
லிங்க பொருத்தம் பொருந்தும்.

**கருணா தேசத்திற்கு**
வசிய பொருத்தம் பொருந்தும்.

**பூமண்டல தேசத்திற்கு**
ராசி பொருத்தம், கணப் பொருத்தம் பொருந்தும்.

**கொங்கண தேசத்திற்கு**
யோனி பொருத்தம் பொருந்தும்.

“இந்த பொருத்தம் பொருந்தினால் கீர்த்தி மூர்த்தி குறைவில்லா விளங்கும்”

# 27. கூட்டு திசைப் பொருத்தம்

பெண்ணுக்கும், ஆணிற்கும் ஒரே திசை வரக்கூடாது. வந்தால் என்ன?

பதில் ஒரே தண்டவாளத்தில் இரண்டு பக்கம் இருந்து ரயில் வந்தால் என்னவாகும்.

ஆண், பெண் இருவருக்குமான திருமணத்திற்குரிய காலங்கள் பின்வருமாறு இருக்க வேண்டும்.

ஆண் பெண் உதய லக்கினத்திற்கு 2, 7, 5, 9, 11-க்குடைய திசை, புக்தி அந்தரங்களிலும்,

சுக்கிரன் தசை, புக்தி, அந்தரங்களிலும், சுக்கிரன் சாரம் பெற்ற கிரகத்தின் திசை, புக்தி, அந்தரங்களிலும்,

லக்னத்திற்கு எட்டாமிடத்தை குரு பார்த்தால், குருவிற்கு 2, 5, 7, 9, 11-ல் நின்றவர் திசை, புக்தி, அந்தரங்களிலும்,

பெண் ஜாதகத்தில் 8-க்குடையவன் திசை, புக்தி, அந்தரங்களிலும், 8-க்குடையவன் சாரம் பெற்ற திசை, புக்தி, அந்தரங்களிலும் திருமணம் நடக்கும்.

"இந்த பொருத்தம் பொருந்தினால் பொன்னான காலம் தேடி வரும்"

# மேற்ச்சொன்ன 27 பொருத்தங்களில்

- 27-ல் 20 பொருத்தங்களுக்கு மேல் பொருந்தினால் **உத்தமமோ உத்தமம்**
- 16-க்கு மேல் 20 பொருத்தம் வரையில் பொருந்தினால் **உத்தமம்.**
- 10-க்கு மேல் 16 பொருத்தம் வரையில் பொருந்தினால் **மத்திமம்.**
- 7-க்கு மேல் 10 பொருத்தம் வரையில் பொருந்தினால் **சுமாரான பொருத்தம்**